**<u>DEPOSITION OF WITNESS</u>**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 161/2022**
**Prosecution Witness – PW4**

| | |
|---|---|
| Name | : திரு. பாஸ்கரன் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.01.2026.

(Accused present.).

<u>முதல் விசாரணை</u>–

நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 09.03.2022 அன்று மணவாளக்குறிச்சி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றினேன். அன்று த.கா பால்ராஜ், த.கா. ரவீந்தரன், த.கா. சுரேஷ்குமார் ஆகியோர்களுடன் நானும் சேர்ந்து மதுவிலக்கு ரோந்து சென்றேன். மணவாளக்குறிச்சி காவல் நிலைய படர்நிலம் வயக்கரை தென்னந்தோப்பு அருகில் மஞ்சள் நிறப்பையை வைத்துக் கொண்டு ஒரு நபர் அவருக்கு முன்னால் நின்ற மற்றொரு நபருக்கு எதையோ கொடுத்து பணம் பெற்றுக் கொண்டிருந்தார். அவரை சந்தேகப்பட்டு போலீசாருடன் சுற்றி வளைத்து பிடித்த போது அவருக்கு முன்னால் நின்னறவர் ஓடி தலைமறைவாகி விட்டார். சாக்கு பையுடன் நின்றவரை பிடித்து விசாரித்த போது அவர் அடையாளம் தெரியாத நபர் அரசு மதுபானங்களை விற்க கூடிய மது பாட்டில்களை வாங்கி கொண்டு சுய இலாபம் கருதி அதிக விலைக்கு விற்பதாக கூறினார். அவரிடம் இருந்த சாக்குபையை சோதனை செய்த போது அதில் 180ml அளவுடன் கூடிய 36 மதுவுடன் கூடிய பாட்டில்கள் இருந்தது. அந்த பாட்டில்கள் மூடி ஏற்கனவே திறந்து மூடிய வண்ணம் இருந்தது. மூடியை திறந்து முகர்ந்து பார்த்த போது அந்த மது பாட்டில்கள் விஷ நெடியுடன் காணப்பட்டது. மேலும் ஆஜர் எதிரி ஏற்கனவே மது பாட்டில்கள் விற்பனை செய்ததாக கூறி அவரிடம் இருந்த ரூ.6000/–ஐ ஒப்படைத்து அவரது பெயர் முகவரியை கூறினார். விஷ நெடியுடன் கூடிய மதுவை விற்பனை செய்த குற்றத்திற்காக அவரை மதியம் 12.00 மணிக்கு கைது செய்தும், அந்த இடத்தில் பொது ஜன சாட்சிகள் இல்லாததால் என்னுடன் மது விலக்கு ரோந்து வந்த த.கா. பால்ராஜ் மற்றும் ரவீந்தரன் ஆகியோர்களை சாட்சியாக வைத்து மதியம் 12.15 மணிக்கு எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களான 36 மது பாட்டில்கள் பணம் ரூ.6000/– மஞ்சள் நிற சாக்குப்பை ஆகியவற்றை

கைப்பற்றியும் மேற்படி மது பாட்டில்களில் 2 பாட்டில்களை ரசாயன பரிசோதனைக்காக சேகரித்து SHO Seal வைத்து அத்தாட்சியில் கைப்பற்றினேன். பின்னர் எதிரி, சொத்துக்கள் மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் மதியம் 13.00 மணிக்கு காவல் நிலையம் சென்று எதிரியின் மீது மணவாளக்குறிச்சி காவல் நிலைய குற்ற எண்.24/2020 சட்ட பிரிவு u/s. 4(1)(i) R/W 4(1) (A) TNP Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அத்தாட்சி, அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4. முதல் தகவல் அறிக்கையின் நகலை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். 09.03.2020 அன்று 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சகாய ரமேஷ் மற்றும் வினோ ஆகியோர் முன்பில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தன். பார்வை மகஜர் அ.சா.ஆ.5. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6. அன்றைய தினமே சாட்சிகள் பால்ராஜ், ரவீந்தரன், சுரேஷ்குமார், சகாய ரமேஷ் மற்றும் வினோ ஆகியோர்களை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். 11.03.2020 அன்று கைப்பற்றப்பட்ட சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். பின்னர் 12.03.2020 அன்று மேற்படி ரசாயன பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்ட சொத்தினை ரசாயன பரிசோதனை கூடத்திற்கு அனுப்பி வைக்க இரணியல் நீதித்துறை நடுவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் கைப்பற்றிய மது பாட்டில்கள் டாஸ் மாக் கடையில் விற்கப்பட்டவை என்றால், சரிதான். அதில் 4 வகையான மது பாட்டில்கள் இருந்தன என்றால், சரிதான். ஒவ்வொரு வகை மது பாட்டிலுக்கும், ஒரு Batch எண் கொடுக்கப்படும் என்றால், சரிதான். மேற்படி 4 வகை மது பாட்டில்களில், நான் 2 பாட்டில்களை மட்டும் தான் எடுத்து பரிசோதனைக்கு கொடுத்தேன் என்றால், சரிதான். கைப்பற்றுதல் நடவடிக்கை மேற்கொண்ட போது, சம்பவ இடத்தில் பொது மக்கள் யாரும் இல்லை. படர் நிலம் வயக்கரை தென்னந்தோப்பிற்கு அருகில் வீடுகள் உள்ளன என்றால், சரியல்ல. தென்னந்தோப்பிற்கு அருகில் ஆறுதான் உள்ளது. அதை தாண்டி தான் வீடுகள் உள்ளன. நான் அந்த வீடுகளில் இருந்து தனிநபர் சாட்சிகள் யாரையும் அழைக்கவில்லை என்றால், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை யாரும் இல்லை. கு.வி.மு.சா. 100 (8) ன் படி தனிநபர் சாட்சிகளை அழைக்க வேண்டும் என்பதும், அவ்வாறு வர மறுத்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். ஆஜர் எதிரியிடம் இருந்து நான் ஒப்புதல் வாக்கு மூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால், சரிதான். ஓடிப்போன நபரை பற்றி நான் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால், எதிரி அவரைப்பற்றி தனக்குத் தெரியாது என்று கூறினார். நான் முகர்ந்து பார்த்து விஷ மது வகை என்று கண்டுபிடிக்க சிறப்பு பயிற்சி அல்லது படிப்பு எடுக்கவில்லை என்றால், சரிதான். சம்பவ சமயத்தில்,

விஷ சாராயம் அருந்தி உடல் நிலை பாதிக்கப்பட்டதாக எழுத்துப் பூர்வமான புகார் எதுவும் எங்கள் காவல் நிலையத்தில் கொடுக்கப்படவில்லை என்றால். சரிதான். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை, அத்தாட்சி மற்றும் சாட்சிகளின் வாக்குமூலம், பார்வை மகஜர், மாதிரி வரைபடம் ஆகியவை தயார் செய்து, எதிரியை கைது செய்ததும் நான் தான் என்றால், சரிதான். மணவாளக்குறிச்சி காவல் நிலைய உட்கோட்டத்தில், மது விலக்கு சிறப்பு காவல் நிலையம் உள்ளது என்றால், சரிதான். வழக்கு பதிவு செய்த பிறகு, வழக்கு கோப்பினை நான் அந்த மது விலக்கு பிரிவிற்கு அனுப்பவில்லை என்றால், நாங்களும், அவ்வாறு வழக்கு பதிவு செய்யலாம். எதிரியை நான் குறிப்பிட்ட நேரம் மற்றும் இடத்தில் நான் விசாரித்து கைது செய்யவில்லை என்றால், சரியல்ல. அத்தாட்சி, பார்வை மகஜர், வரைபடம் ஆகியவற்றை நான் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்தேன் என்றால், சரியல்ல. புள்ளி விபரங்களுக்காக பதிவு செய்த இந்த வழக்கில் நான் ஆஜர் எதிரிக்கு எதிராக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**